பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

**05 11 2025** **7 15**

**புதன்கிழமை** **காலை**

<u>**தலைப்புச் செய்திகள்**</u>

1. குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று சத்தீஸ்கட் மாநிலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளின் கலந்துகொள்கிறார்.

2. உலகின் முன்னணி 10 கூட்டுறவு நிறுவனங்களில் முதல் இரண்டு இடங்களை இந்திய கூட்டுறவு நிறுவனங்கள் பெற்றுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. தடையற்ற வர்த்தக உடன்படிக்கை தொடர்பாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், நியூசிலாந்து வர்த்தகத்துறை அமைச்சர் திரு. Tood Mcclay-வுடன் பேச்சுகள் நடத்துகிறார்.

ஹ

4. மீனவர்கள் பிரச்சினைக்கு இந்தியாவும்-இலங்கையும் இணைந்து தீர்வு காண வேண்டும் என்று இலங்கை முன்னாள் பிரதமரும், அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. சஜித் பிரேமதாசா கூறியுள்ளார்.

5. குருநானக் ஜெயந்தி நாடு முழுவதும் இன்று சீக்கியர்களால் கொண்டாடப்படுகிறது.

**--- இனி விரிவான செய்திகள் ---**

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று சத்தீஸ்கட் மாநிலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளின் கலந்துகொள்கிறார். குடியரசு துணைத்தலைவராக அவர் பதவியேற்ற பின்னர் இம்மாநிலத்திற்கு செல்வது இதுவே முதல் முறையாகும்.

சத்தீஸ்கட் மாநிலம் உருவாக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைவதை குறிக்கும் வகையில் நவராய்ப்பூர் மற்றும் ராஜ்நந்கானில் நடைபெறும் விழாவின் நிறைவு நிகழ்ச்சியில் அவர் கலந்துகொள்கிறார்.

ராய்ப்பூரில் உள்ள Sendh ஏரியில் இந்திய விமானப் படையின் சூரிய கிரண் விமான சாகச குழுவினரின் விமான கண்காட்சியையும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பார்வையிட உள்ளார்.

<<<<>>>>

உலகின் முன்னணி 10 கூட்டுறவு நிறுவனங்களில் முதல் இரண்டு இடங்களை இந்திய கூட்டுறவு நிறுவனங்கள் பெற்றுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இது இந்தியாவிற்கு பெருமையான தருணம் என்று சமூக வலைதளப் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமுல் நிறுவத்துடன் தொடர்புடைய லட்சக்கணக்கான மகளிர் மற்றும் இந்திய விவசாயிகள் கூட்டுறவு உர நிறுவனத்திற்கு பங்களிக்கும் விவசாயிகளின் அயராத அர்ப்பணிப்புக்கு கிடைத்துள்ள மரியாதை இது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கூட்டுறவு நிறுவனங்கள் உலகத் தரத்திற்கு மாற்றப்பட்டுள்ளதற்கு இதுவே சான்று என்றும் திரு. அமித் ஷா கூறினார்.

<<<<>>>>

தடையற்ற வர்த்தக உடன்படிக்கை தொடர்பாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், நியூசிலாந்து வர்த்தகத்துறை அமைச்சர் திரு. Tood Mcclay-வுடன் பேச்சுகள் நடத்துகிறார்.

நியூசிலாந்தில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள திரு. கோயல், இரு நாடுகளுக்கிடையே வர்த்தகம், முதலீடு மற்றும் புதுமைக் கண்டுபிடிப்பு ஆகிய துறைகளில் ஒத்துழைத்து செயல்படுவது குறித்து பேச்சுகள் நடத்தினார்.

இதுகுறித்து மத்திய வர்த்தக அமைச்சகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில், இந்தியா-நியூசிலாந்து இடையே தடையற்ற

வர்த்தக உடன்படிக்கை தொடர்பாக நான்காவது சுற்றுப் பேச்சுகள் தொடங்கியுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், இருதரப்பு வர்த்தகத்தை மேலும் தீவிரப்படுத்த இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மீனவர்கள் பிரச்சினைக்கு இந்தியாவும்-இலங்கையும் இணைந்து தீர்வு காண வேண்டும் என்று இலங்கை முன்னாள் பிரதமரும், அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. சஜித் பிரேமதாசா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மீனவர் பிரச்சினை மிகவும் முக்கியமான பிரச்சினை என்று கூறினார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இரு நாடுகளும் ஒத்துழைத்து அர்த்தமுள்ள தீர்வை காண வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

சட்டவிரோதமான மற்றும் முறைப்படுத்தப்படாத மீன்பிடி பிரச்சினைகளுக்கு ஐ.நா. வகுத்துள்ள சர்வதேச கடல் சட்டத்தின்

அடிப்படையில் தீர்வுகாண வேண்டும் என்றும் திரு. சஜித் பிரேமதாசா கூறினார்.

<<<<>>>>

பாதுகாப்பான மற்றும் சுயசார்புள்ள இந்தியாவை உருவாக்க இளைஞர்கள் முக்கியப் பங்காற்ற வேண்டும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் நேற்று இந்திய ராணுவம் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கு ஒன்றில் பேசிய அவர், 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் உறுதிப்பாட்டை நிறைவேற்றும் வகையில் இளைஞர்கள் செயல்பட வேண்டும் என்று கூறினார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 7 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளதாகவும், உலகில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியப் பொருளாதாரம் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியை புதுதில்லியில் நேற்று **Syro** மலபார் திருச்சபையின் தலைவரான பேராயர் **Raphael Thattil** சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பின்போது பேராயர் டாக்டர் **Kuriakose Bharanikulangara** உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

திருச்சபை தலைவர்களுடனான இந்த சந்திப்பு மிகவும் அர்த்தமுள்ளதாக அமைந்தது என்று பிரதமர் தமது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

மதநல்லிணக்கம் மற்றும் சமூக பணிகள் குறித்து ஆழமான கலந்துரையாடல் நடைபெற்றதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

சீக்கிய மத த்தை நிறுவிய **10** சீக்கிய குருமார்களில் முதன்மை குருவான குருநானக் தேவின் **556-**வது பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் இன்று நாடு முழுவதும் குருநானக் ஜெயந்தி உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதை முன்னிட்டு சீக்கிய குருதுவாராக்களில் இன்று காலை முதல் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இது சீக்கிய மதத்தில் மிகவும் புனிதமான பண்டிகைகளில் ஒன்றாகும்.

இந்நாளை முன்னிட்டு சீக்கிய மக்களுக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்துகள் தெரிவித்துள்ளார்.

உண்மை, நீதி, இரக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு வாழ்க்கையை வாழ்வதே உண்மையான வெற்றியின் அளவுகோல் என்று குருநானக்கின் போதனைகள் கற்றுத்தருவதாக கூறியுள்ளார்.

குருநானக் தேவ் காட்டிய பாதையில் சென்று அமைதியான மற்றும் வளமான தேசத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

அசாம் முதலமைச்சர் திரு. ஹிமந்தா பிஸ்வா சர்மா புதுதில்லியில் நேற்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார்.

கவுஹாத்தி விமான நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள முனையத்தை திறந்து வைக்கும் நிகழ்ச்சிக்கு வருகை தருமாறு முறைப்படி அவர் அழைப்பு விடுத்தார்.

**10** ஆயிரத்து **600** கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள **Namrup** உர தொழிற்சாலையின் திறப்பு விழாவில் பங்கேற்குமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

<<<<>>>>

மத்திய அரசு எடுத்த சீரிய நடவடிக்கையால் சமூக வளர்ச்சிக் குறியீட்டில் இந்தியா முன்னேறி வருவதாக மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

கத்தார் தலைநகர் தோஹாவில் நடைபெற்று வரும் சமூக வளர்ச்சிக்கான இரண்டாவது உலக உச்சிமாநாட்டில் நேற்று பேசிய அவர், வேலைவாய்ப்பை ஏற்படுத்த மத்திய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளை விளக்கினார்.

கடந்த **10** ஆண்டுகளில் நாட்டில் ஒரு கோடியே **70** லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக கூறினார்.

பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பது இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாகவும், நாட்டில் வேலையின்மை **6** சதவீதத்தில் இருந்து **3** புள்ளி **2** சதவீதமாக குறைந்தள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தொழிலாளர் சட்டங்கள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அனைவருக்கும் ஓய்வூதியம் உறுதி செய்யப்படுவதை நோக்கி இந்தியா முன்னேறி வருவதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<>>>>

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரசில் எல்லைப் பாதுகாப்புப் படையினர் கைத்துப்பாக்கி மற்றும் ட்ரோன்களைக் கைப்பற்றினர்.

இந்தியா-பாகிஸ்தான் எல்லை அருகே வழக்கமான ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது இது கண்டுபிடிக்கப்பட்டதாக எல்லைப் பாதுகாப்புப் படையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எல்லைப் பகுதியில் கடத்தலுக்காக ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று அவர் கூறினார்.

இந்நிலையில் எல்லைப் பாதுகாப்புப் படையினரும், பஞ்சாப் காவல்துறையினரும் கூட்டாக ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது குருதாஸ்பூர் அருகே தானாமண்டி என்ற இடத்தில் கடத்தல்காரர் ஒருவரைக் கைது செய்தனர்.

<<<<>>>>

மகாராஷ்டிரா மாநிலம் புனே மாவட்டத்தில் பிம்பர்கத் கிராமத்தில் பொதுமக்களை அச்சுறுத்தி வந்த சிறுத்தையை வனத்துறையினர் சுட்டுக்டிகான்றனர்.

கடந்த 20 நாட்களாக பொதுமக்களை அச்சுறுத்தி வந்த அந்த சிறுத்தையால் 5 வயது சிறுமி உட்பட 3 பேர் உயிரிழந்தனர்.

இதனால் பொதுமக்களின் கோபம் அதிகரித்ததையடுத்து அந்த சிறுத்தையை கூண்டு வைத்துப் பிடிக்க முயற்சி செய்தனர்.

அந்த முயற்சிக பலனளிக்காமல் போகவே துப்பாக்கியால் சுட்டனர்.

<<<<>>>>

மகாராஷ்டிரா, கோவா, கிழக்கு மத்தியப்பிரதேச பகுதிகளில் இன்று இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாகாலாந்து, மிசோரம், திரிபுரா மாநிலங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகா, ஆந்திராவின் கடலோரப் பகுதிகளிலும் சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக வட தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், தென் தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, அரியலூர், திருச்சி ஆகிய 7 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<The End>>>>**